# மாலை முரசு

பக்கங்கள் 18 + 2

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 25 வெள்ளிக்கிழமை 11.10.2024 | அதிர்வு 71


## 17 அரசியல் கட்சிகளும் 14 சுயேட்சைக் குழுக்களும் திருமலையில் போட்டி

“வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் 20 அரசியல் கட்சிகள், 17 சுயேச்சைக் குழுக்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தன.

08▶


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# யாழில் 6 ஆசனங்களுக்காக 396 வேட்பாளர்கள் களத்தில்

## மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அறிவிப்பு

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 23 அரசியல் கட்சிகள், 23 சுயேச்சைக் குழுக்கள் என மொத்தமாக 46 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன என்றும், அவற்றில் இரண்டு சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்றும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

08▶

# வன்னியில் இம்முறை 423 பேர் களத்தில்; அங்கும் ஆறு ஆசனங்களுக்காகப் போட்டி

(கி.வசந்தன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு 22 அரசியல் கட்சிகள் மற்றும் 25 சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தன என்றும், அவற்றில் 4 குழுக்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன என்றும் வவுனியா மாவட்ட அரசஅதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான பீ.ஏ. சரத்சந்திர தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை கடந்த 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியுடன்

08▶





# ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு தவராசா தலைமையில் வேட்புமனு!

(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன், ந.லோகதயாளன்)

ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு சுயேச்சைக் குழுவாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை வேட்புமனுவைத் தாக்கல் செய்தது.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில் இந்த வேட்புமனு யாழ். தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனத்தால் அதிருப்தியடைந்து அக்கட்சியிருந்து வெளியேறியவர்கள், ஏனைய சில கட்சிகளையும் உள்ளடக்கி ஜனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு எனும் புதிய கட்சியை உருவாக்கி இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன், முன்னாள் கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் த.ஐங்கரன் உள்ளிட்ட 9 பேர் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.









# யாழில் தபால் பெட்டிச் சின்னத்தில் இம்முறை களமிறங்கும் அங்கஜன்

## ஜனநாயகத் தேசியக் கூட்டணி சார்பில் வேட்புமனு

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

அங்கஜன் இராமநாதன் தலைமையிலான ஜனநாயகத் தேசியக் கூட்டணியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்புமனுவை இன்று வெள்ளிக்கிழமை கையளித்தனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் எம். பி. அங்கஜன் இராமநாதன் தலைமையிலான ஜனநாயகத் தேசியக் கூட்டணியினர், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தபால் பெட்டிச் சின்னத்தில் களமிறங்குகின்றனர் .

அவர்கள் இன்று முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

அங்கஜன் இராமநாதன் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# யாழில் சர்வஜன அதிகார கூட்டணி வேட்புமனு

## அருண் சித்தார்த் தலைமையில் போட்டி

**(பிரபாகரன் டிலக்சன்)**

சர்வஜன அதிகார கூட்டணியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்புமனுவை இன்று வெள்ளிக்கிழமை கையளித்தனர்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் சர்வஜன அதிகார கூட்டணியினர் பதக்கச் சின்னத்தில் களமிறங்குகின்றனர்.

அவர்கள் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக இன்று முற்பகல் 9.30 மணியளவில் மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் அருண் சித்தார்த் தலைமையில் சர்வஜன அதிகார கூட்டணியினர் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# யாழில் ஆனந்தசங்கரி தலைமையில் களமிறங்குகின்றது ‘உதயசூரியன்’

(பிரபாகரன் டிலக்சன்)

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்புமனுவை இன்று கையளித்தனர்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக இன்று முற்பகல் 10.30 மணியளவில் வீ.ஆனந்தசங்கரியை முதன்மை வேட்பாளராகக் குறிப்பிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உதயசூரியன் சின்னத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



# வன்னியில் ரிஷாத் வேட்புமனுத் தாக்கல்

(கி.வசந்தன்)

வன்னி மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தாக்கல் செய்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரான ரிஷாத் பதியுதீன் ஐக் கிய மக்கள் சக்தியின் தாலைபேசி சின் னத்தில் போட்டியிடுகின்றார்.

அவர் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

இதன்பாதே ரசிகா பிரியதர்சினி, நிராஸே உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் மாவட்ட அமைப்பாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் உள்ளிட்ட வேட்பாளர்களும் வருகை தந்திருந்தனர்.

கட்சியின் முக்கியஸ்தர்களும் இதன்போது வருகை தந்திருந்தனர்.







# முருகேசு சந்திரகுமார் தலைமையில் யாழில் ஐக்கிய மக்கள் சக்தி போட்டி



(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஐக்கிய மக்கள் சக்தி தாக்கல் செய்தது.

இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் முருகேசு சந்திரகுமார் தலைமையிலான வேட்பாளர் அணியினர் வேட்புமனுவைக் கையளித்தனர்.




# யாழில் ஐ.தே.கவும் வேட்புமனுத் தாக்கல்



(பிரபாகரன் டிலக்சன்)

ஐக்கிய தேசியக் கட்சியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்புமனுவைக் கையளித்தனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஐக்கிய தேசியக் கட்சியினர் யாழ். மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

யாழ். மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, டேவிட் நவரத்தினராஜ் தலைமையில் யானைச் சின்னத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# புதிய ஜனாதிபதி தயாரா?

இலங்கையில் நீண்ட காலம் புரையோடிப் போயிருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் முக்கிய பங்காளர்களாக இருக்கின்ற ஒரு தரப்பு புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகமாகும்.

தேசிய இனப் பிரச்சனையின் ஆழமான விளைவுகளில் ஒன்று தமிழர்களில் கணிசமானோர் தமது தாயகத்தில் நின்று பிடிக்க முடியாமல் இடம்பெயர்ந்து புலம்பெயர்ந்து சென்றமையாகும்.

நல்லிணக்க நடவடிக்கை எதுவும் இடம்பெயர்ந்தோர்-புலம்பெயர்ந்தோர் - மீளத் திரும்புவதற்கான உரித்தோடு அமைய வேண்டும்.

அந்த வகையில் இலங்கை இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் விடயத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்பும் மிக முக்கியமானதாகும். தீர்வு எத்தனங்களில் அவர்களின் பங்களிப்பு காத்திரமானதாகும்.

இந்தப் பின்புலத்தில் மிக வலிமையான கனடிய புலம்பெயர் தமிழ் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கின்ற கனடிய தமிழர் பேரவை புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆட்சிக்கு வர முன்னர் அவரது தரப்பினர் பிரச்சாரத்துக்கு முன்னெடுத்த விடயங்களை குறிப்பிட்டு இந்த கடிதம் வரையப்பட்டிருக்கின்றது. அவற்றில் உள்ள முக்கிய சாராம்சங்கள் கவனிக்கத்தக்கவை.

● எஞ்சியுள்ள அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தல்.

● தேர்தல் பரப்புரை அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இல்லாது செய்தல்.

● வட, கிழக்கு மாகாணங்களில் தற்போது இலங்கை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தனியாருக்குச் சொந்தமான அனைத்துக் காணிகளையும் உரிமையாளர்களிடம் ஒப்படைத்தல். சட்டவிரோதமான காணிச் சுவீகரிப்புகளை நிறுத்துதல்.

● தமிழர்களின் வழிபாட்டுத் தலங்களை ஆக்கிரமிப்புகளிலிருந்து பாதுகாப்பதன் மூலமும், புதிய பௌத்த விகாரைகள் தமிழர் நிலங்களில் கட்டப்படுவதைத் தடுப்பதன் மூலமும் தமிழர்களின் சமய உரிமைகளை நிலை நிறுத்துதல்.

● புதிய அரசமைப்புச் சட்டம் உறுதிப்படுத்தப்படும் வரை 13 திருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றி, மாகாண சபைத் தேர்தலைத் தாமதமின்றி நடத்துதல் வேண்டும்.

● பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றி, அனைத்துச் சமூகங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களைத் தாமதமின்றி நடத்துதல் வேண்டும்.

● வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்புத் துறையைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும். உள்ளூர் வணிகர்கள் மற்றும் விவசாயிகளுடன் போட்டியிட்டு, இராணுவத் தலையீட்டுடன் முன்னெடுக்கப்படும் வர்த்தக, விவசாய முயற்சிகளை நிறுத்த வேண்டும்.

- இப்படிச் சுட்டிக்காட்டி இருக்கின்றது கனடியத் தமிழர் பேரவை.

தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதற்கான களச் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு இத்தகைய முதல் கட்ட நடவடிக்கைகள் மிக அவசியமானவை.

இது போன்ற நடவடிக்கைகளை துணிச்சலோடு முன்னெடுப்பதன் மூலம் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமாக நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய - நீதி, நியாயமான - தீர்வு ஒன்றைக் காண்பதில் தனக்குள்ள பற்றுறுதியை புதிய ஜனாதிபதி வெளிப்படுத்த முடியும் என்பது முக்கிய விவகாரமாகும்.

அவற்றைச் செய்ய புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தயாரா என்பதுதான் கேள்வி.



# வன்னியில் கங்காரு சின்னத்தில் காதர் மஸ்தான் இம்முறை போட்டி

(கி.வசந்தன்)

வன்னி மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை முன்னாள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தாக்கல் செய்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் இலங்கைத் தொழிலாளர் கட்சியின் கங்காரு சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

இந்நிலையில், வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை அவர் வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

இதன்போது கட்சியின் முக்கியஸ்தர்கள் வருகை தந்திருந்தனர்.









# ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியும் யாழ். மாவட்டத்தில் வேட்புமனுத் தாக்கல்

(பிரபாகரன் டிலக்சன்)

முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சி, ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் கீழ் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்தது.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக இன்று முற்பகல் 11 மணியளவில் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியினர் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட முதன்மை வேட்பாளராக ஞானப்பிரகாசம் சுலக்சன் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியினர் கண்ணாடிச் சின்னத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் அம்பாறையில் நேற்று வேட்புமனு



(பாறுக் ஷிஹான்)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் வீடு சின்னத்தில் போட்டியிடும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் வேட்பாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை (10) வேட்புமனு தாக்கல் செய்தனர்.

கட்சியின் வேட்பாளர்கள் அம்பாறை மாவட்ட செயலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர்.

தலைமை வேட்பாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தலைமையிலான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் (அக்கரைப்பற்று), முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் (காரைதீவு), குபேந்திரராஜா ஜெகசுதன் (திருக்கோவில்), கந்தசாமி இந்துனேஷ் (திருக்கோவில்), அருள்ஞான மூர்த்தி நிதான்ஞ்சன் (கல்முனை), பேரின்பநாயகம் ஜீவராஜ் (தம்பிலுவில்), பாக்கியம் மஞ்சுளா( பெரிய நீலாவணை), ஜெயக்குமார் யசோதரன்(வளத்தாபிட்டி), கனகரத்தினம் ஜனார்த்தனன் (ஆலையடிவேம்பு) ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவுக்கு வந்திருந்தது.

அந்தவகையில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகத்தில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இம்முறை வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 24 அரசியல் கட்சிகளும், 27 சுயேச்சைக் குழுக்களும் என மொத்தமாக 51 குழுக்கள் வேட்புமனுக்களைக் கையளித்திருந்தன.

அவற்றில் இரண்டு அரசியல் கட்சிகள் மற்றும் இரண்டு சுயேச்சைக் குழுக்களின் விண்ணப்பங்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படாத காரணத்தால் தேர்தல் அலுவலகத்தால் நிராகரிக்கப்பட்டன.

எங்கள் மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீ ரெலோ கட்சியின் ப.உதயராசா போட்டியிடவிருந்த ஜனநாயகத் தேசியக் கூட்டணி ஆகிய அரசியல் கட்சிகளின் வேட்பு மனுக்களே இவ்வாறு நிராகரிக்கப்பட்டன.

அந்தவகையில் 22 அரசியல் கட்சிகளினதும் மற்றும் 25 சுயேச்சைக் குழுக்களினதும் விண்ணப்பங்களும் என 47 குழுக்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அதற்கமைய 2024 ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தலில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 6 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 423 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்." - என்றார்.

## 17 அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றில் 17 அரசியல் கட்சிகளினதும், 14 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதேவேளை மூன்று கட்சிகளினதும், மூன்று சுயேச்சைக் குழுக்களினதும் வேட்புமனு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன."

- இவ்வாறு திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆர். சசீலன் தெரிவித்தார்.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய ஜனநாயக முன்னணி, அகில இலங்கை தமிழர் மகா சபை, ஐக்கிய தேசிய சுதந்திரக் கூட்டமைப்பு ஆகிய அரசியல் கட்சிகளினதும், மூன்று சுயேச்சைக் குழுக்களினதும் வேட்புமனு விண்ணப்பங்கள் இவ்வாறு நிராகரிக்கப்பட்டன.

சத்தியக் கடதாசி சமர்ப்பிக்காமை, சரியான முறையில் விண்ணப்பத்தைக் கையளிக்காமை உள்ளிட்ட காரணங்களால் இந்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன." - என்றார்.

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அடிப்படையில் 23 அரசியல் கட்சிகளும், 21 சுயேச்சைக் குழுக்களும் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களாக 396 பேர் போட்டியிடவுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 5 இலட்சத்து 93 ஆயிரத்து 187 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம.பிரதீபன் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் உதவி தேர்தல் ஆணைநாளர் அமல்ராஜ், கிளிநொச்சி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் முரளிதரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் முப்பெரும் விழா

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள கல்முனை கலாசார மத்திய நிலையம் பிரதேச செயலகத்தோடு இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச சிறுவர் தினம், முதியோர் தினம், மற்றும் ஆசிரியர் தினம் ஆகியவற்றை ஒன்றிணைத்த "முப்பெரும் விழா" நிகழ்வுகள் கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பாளர் திருமதி ஜெனித்ரா தேவசந்திர தலைமையில் மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி முதன்மை அதிதியாக கலந்து கொண் டார். கௌரவ அதிதிகளாக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.சாஜித், சட்டத்தரணி ஏ. அப்றத் அஹமட் ஆகியோர் கலந்து கொண் டனர்.

சிறப்பு அதிதிகளாக, ஹேண்ட்லூம் சிட்டி நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.எல்.எம். ஜெமீல் அமானா ஜுவல்ஸ் உரிமையாளர் ஐ.எம்.றாஸிக், ஆபிதா ஹேண்ட்லூம் நிறுவனத்தின் உரி மையாளர் எம்.என்.இஸட். றூமி, தஹானி ஹாட்வேயார் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.என். இனாஸ் அஹமட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலை கலாசார நிகழ்வுகள் அரங் கேற்றப்பட்டதுடன் சேவை நலன் பாராட்டுக்களும் இடம் பெற்றன.

பிரதேச செயலாளரின் சேவையைப் பாராட்டி விசேடமாக வாழ்த்துப்பா வழங்கி பொன்னாடை போர்த்தி கௌர விக்கப்பட்டார்.

கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி குழு முன்னாள் செயலாளர் கவிஞர் விஜிலி மூஸா நினைவு சின்னம் வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளும் நினைவுச் சின்னங்கள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.



கலாசார நிகழ்வுகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கும் சான்றிதழ் கள் வழங்கப்பட்டன.

கலாசார அபிவிருத்தி குழுவின் பொருளாளர் தேச அபிமானி எம்.ஏ.எம். கைதர் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த கலாச்சார முப்பெரும் விழாவில் சிறுவர் தினத்தை பிரதிபலிக்கும் சிறுவர் நிகழ்ச்சிகள், முதியோர் தினத்தை பிரதிபலிக்கும் முதியோர் விசேட கலை கலாசார நிகழ்வுகள், ஆசிரியர்களை கௌரவிக்கும் கலை நிகழ்ச்சிகள் என்பன அரங்கேற்றப்பட்டன. நிகழ்வின் போது கவிதாயினி மருதமுனை எம். ஏ. மாஹிறா எழுதிய கவிதை நூல் பிரதேச செயலாளருக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலாசார அபிவிருத்தி குழுவின் உறுப்பினர்கள், மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்கள், பிரதேச கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு அம்பாறையில் வேட்பு மனுத் தாக்கல்!

**(வி.ரி. சகாதேவராஜா)**

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு அம்பாறை மாவட்ட வேட்பாளர்கள் இன்று (11) வெள் ளிக்கிழமை அம்பாறை மாவட்ட செயல கத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்தனர்.

கிழக்கு மாகாண சபையின் முன் னாள் உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான சோமசுந்தரம் புஸ்பராஜா உள்ளிட்ட பத்து பேர் வேட்புமனுவில் ஒப்பமிட்டிருந் தனர்.

சங்கு சின்னத்தில் போட்டியிடும் வேட்புமனுவில் சோமசுந்தரம் புஷ்ப ராஜா, சபாபதி நேசராசா, கதிர்காமத் தம்பி வேலுப்பிள்ளை , கிருஷ்ண பிள்ளை லிங்கேஸ்வரன், சிந்தாத்துரை துரை சிங்கம், சுப்பிரமணியம் தவமணி, தியாகராஜா கார்த்திக், ராஜகுமார் பிரகாஷ், செல்லத்தம்பி புகனேஸ்வரி, பாலசுந்தரம் பரமேஸ்வரன் ஆகியோர் ஒப்பிட்டுள்ளனர்.

# திகாமடுல்லவில் வேட்புமனு தாக்கல்



**(எம். எப். றிபாஸ்.)**

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் திகாமடுல்ல மாட்டத்தில் சீ.எம். கலீம் தலைமையிலான சுயேட்சை குழு வேட்பு மனுவை இன்று (11) அம்பாறை மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்தது.







# உலக உளச் சுகாதார தினம் சம்மாந்துறையில் அனுஷ்டிப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

உலக உளச் சுகாதார தினம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் த. பிரபாசங்கர் தலைமையில் நேற்று (10) வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது.

வைத்தியசாலையின் உள சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் கசுன் கடுவல மற்றும் திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ. ஆர். நியாஸ் அஹமட் ஆகியோரின் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற இந்த விழாவுக்குப் பிரதம அதிதியாகக் கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் பணிப்பாளர் வைத்தியர் சஹீலா இஸ்ஸடீன் , அதிதிகள் வரிசையில் கல்முனை (வடக்கு) ஆதார வைத்திய சாலையின் மன நோயியல் வைத்திய நிபுணர் அச்சினி சமரநாயக்க, கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் மனநல மருத்துவர் ந. அருந்திரன், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் வைத்தியர் ஐ.எல்.எம் சபீக், சம்மாந்துறை பிரதேச செயலாளர் அல்ஹாஜ் எஸ். எல்.எம் ஹனிபா, சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டீ.எஸ். ஜயலத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனையினதும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையினதும் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முதலாவதாக நடை பவனியும் இடம்பெற்றது. பின்னர் வீதி நாடகம் இடம்பெற்றது. தொடர்ந்து உளநல மருத்துவர் டாக்டர் எம்.ஜே.நௌபல் அவர்களால் உளநலம் என்னும் தொனிப் பொருளுடன் கூடிய விரிவுரை நிகழ்த் தப்பட்டது.

வீதி நாடகம் காரைதீவு விபுலானந்தா மத்திய மகா வித்தியாலய மாணவர்களால் நடிக்கப்பட்டது.










# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறையில் வேட்புமனுத் தாக்கல்

**(வி.ரி.சகாதேவராஜா)**

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட வேட்பாளர்கள் இன்று (11) வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்தனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசால் காசிம், எம். ஐ.எம். மன்சூர், மற்றும் எம். எஸ். அப்துல் பாஷித், எம்.எஸ். உதுமா லெப்பை, ஏ.எல்.தவம், ரஹ்மத் மன்சூர், ஏ.எல்.முஸ்மி, சிராஸ் மீராசாஹிப், ஏ.ஆர்.அமீர், கே.எச்.திலக் ரஞ்சித் ஆகியோர் ஒப்பிட்டுள்ளனர்.

# முதன்மை வேட்பாளர் குகதாசன் தலைமையில் தமிழ் அரசுக் கட்சி திருமலையில் வேட்புமனு!



**(ஹஸ்பர்)**

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளராக போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தலைமையில் இன்று (11) வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் நால்வரும் ஏனைய கட்சிகளில் இருந்து மூவரும் திருகோணமலை மாவட்டத்தில் இந்த முறை வீட்டு சின்னத்தில் போட்டியிடவுள்ளனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ச.குகதாசன் தலைமையிலான குழுவினர்,

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். வடக்குக் கிழக்கில் இந்த மாவட்டத்தில் மாத்திரம் இணைந்து கூட்டணியாக வீட்டு சின்னத்தில் போட்டியிடுகிறோம்.

எதிர்காலத்தில் மக்களின் உரிமைகளோடு இணைந்த அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கவுள்ளோம். ஓரணியாக இணைந்தால் தான் இரண்டு ஆசனங்களையாவது பெற முடியும்.

கடந்த தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் போனது. எனவேதான் தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாக்கக் கூட்டணியாக இணைந்துள்ளோம் .

கடந்த 30 வருட கால யுத்தம் காரணமாகப் பாதிப்படைந்த தமிழ் சமூகம் இவ்வாறான விடயங்களில் தமிழ் தேசியத்தைப் பாதுகாக.– என்றனர்.






# இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நுவரெலியாவில் வேட்புமனுத் தாக்கல்

(க.கிஷாந்தன்)

நடைபெறவுள்ள 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக அதன் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் தவிசாளர் மருதபாண்டி ராமேஷ்வரன் உள்ளிட்ட குழுவினர் இன்று (11) காலை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டணியின் கீழ் யானை சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

இதன் நுவரெலியா மாவட்ட தலைமை வேட்பாளரான ஜீவன் தொண்டமான் மற்றும் வேட்பாளர்கள் உள்ளிட்ட பலர் மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்து வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.



# நுணாவில் பயனாளிக் குடும்பத்துக்கு இராணுவத்தால் வீடமைத்துக் கையளிப்பு

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நுணாவில் மேற்குப் பகுதியில் உள்ள பயனாளிக் குடும்பம் ஒன்றுக்கு இலங்கை இராணுவத்தினரால் வீடமைத்துக் கையளிக்கப்பட்டது.

நேற்று (10) வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த வீடு கையளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக 52 ஆவது காலாட்படையின் சேனாதிபதி மேஜர் ஜெனரல் பத்திரனவிதான கலந்து கொண்டு பயனாளியிடம் வீட்டைக் கையளித்திருந்தார்.

இந்த வீடானது இமேஜின் காம்பாஷன் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் இலங்கை இராணுவத்தினரின் சரீர உதவியோடு அமைத்துக் கொடுக்கப்பட்டது.

வீடு கையளிப்பு நிகழ்வில் இராணுவ அதிகாரிகள், கத்தோலிக்க மதகுரு உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.



# ‘மண்ணும் மனிதர்களும்’ நூல் நியூசிலாந்தில் நாளை வெளியீடு

நியூசிலாந்தில் வசித்துவரும் மூத்த பொறியியலாளரும், சமூகச் செயற்பாட்டாளருமான யோர்ச் அருளானந்தம் எழுதிய சிறுகதைத் தொகுப்பு நூலான மண்ணும் மனிதர்களும் நூல் நாளை (12) ஒக்லாந்தில் வெளியிடப்படவுள்ளது.

ஒக்லாந்திலுள்ள திறீ கிங்ஸ், பிக்லிங் மாநாட்டு மைய மண்டபத்தில் சண் மாஸ்டர் (வே.சண்முகராஜா) தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் லீனப்பு அருள் தாஸ், ரமேஷ் செல்வகுமார், பிரியா சிறீதரன், மணி நிலவன் அறிவுக்கரசு, இலக்குவன் சொக்கலிங்கம், தமிழினி வாமதேவன், வித்தியா நந்தகுமார், பிரேம்குமார் கந்தசாமி ஆகியோர் நூலாய்வுரை நிகழ்த்தவுள்ளனர்.



# 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபா வாழ்வாதாரம் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டது!

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கிளிநொச்சி, கோணாவில் கிழக்கை சேர்ந்த இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது.

விவசாயம் மேற்கொள்வதற்கு இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

2 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆழ்துளைக் கிணறு ஒன்று அமைப்பதற்கு இந்த நிதியுதவி நேற்று வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

சுபநேரத்தில் ஆழ் துளைக் கிணறு அமைப்பதற்கான ஆரம்ப வேலைகளும் இடம்பெற்றன.

இந்த உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையிலான தொண்டர்கள் நேரடியாகச் சென்று வழங்கினர்.





# நாகை மீனவர்களை தாக்கி மீன்பிடி உபகரணங்கள் பறிப்பு

## இலங்கை கடல் கொள்ளையர் என குற்றச்சாட்டு

நாகை மீனவர்கள் 18 பேர் மீது தாக்குதல் நடத்தி, அவர்களது வலைகள் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்களை இலங்கை கடல் கொள்ளையர்கள் பறித்துச் சென்ற சம்பவம் தமிழக மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்திஉள்ளது.

நாகை மாவட்டம் செருதூர் மீனவக் கிராமத்தைச் சேர்ந்த ராஜ்குமார் என்பவர், சக மீனவர்கள் 4 பேருடன் கடந்த 8 ஆம் திகதி பைபர் படகில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றுள்ளார்.

அப்போது அங்கு 2 பைபர் படகுகளில் வந்த இலங்கையை சேர்ந்த 9 கடல் கொள்ளையர்கள் கத்தியைக் காட்டி மிரட்டி தமிழக மீனவர்களை தாக்கியதுடன், அவர்களது வலை மற்றும் உபகரணங்களைப் பறித்துச் சென்றனர். காயமடைந்த 5 மீனவர்களும் நேற்று காலை செருதூர் மீன் இறங்கு தளத்துக்கு வந்து சேர்ந்தனர்.

இதேபோல, கோபால் என்பவருக்குச் சொந்தமான படகில் மீன் பிடிக்கச் சென்ற செல்லையன் உள்ளிட்ட 5 மீனவர்கள் மீதும், மகேஸ்வரி என்பவருக்குச் சொந்தமான படகில் மீன் பிடிக்கச் சென்ற செல்வம் உள்ளிட்ட 4 மீனவர்கள் மீதும், சத்தியசீலன் என்பவருக்குச் சொந்தமான படகில் மீன்பிடிக்கச் சென்ற விஜயன் உள்ளிட்ட 4 மீனவர்கள் மீதும் இலங்கை கடல்கொள்ளையர்கள் தாக்குதல்நடத்தி உள்ளனர்.

மேலும், அவர்களிடமிருந்து 6 லட்சம் ரூபா மதிப்பிலான 800 கிலோ மீன்பிடி வலைகள், ஜி.பி.எஸ். உள்ளிட்ட உபகரணங்களை கடல் கொள்ளையர்கள் பறித்துச் சென்றனர். காயமடைந்த மீனவர்கள்ஒரத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில்,தாக்குதல் சம்பவம் குறித்து கீழையூர் கடலோரக் காவல் குழும பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

இதேபோல, நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த வெள்ளப்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த மணிகண்டன் என்பவருக்கு சொந்தமான படகில் சென்ற 5 மீனவர்களைத் தாக்கிய இலங்கை கடல் கொள்ளையர், படகில் இருந்த 200 கிலோ வலைகள் மற்றும் 50 கிலோ மீன்களைப் பறித்துச் சென்றனர். பின்னர், கரை திரும்பிய மீனவர்கள் அளித்த புகாரின்பேரில் கடலோர காவல் குழும பொலிஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர்.

ஏற்கெனவே, வெள்ளப்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களை இலங்கை கடல் கொள்ளையர்கள் பறித்துச் சென்ற நிலையில்,தற்போது மீண்டும் தாக்குதல்சம்பவம் நடைபெற்றுள்ளது சக மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



# நாடுகள் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும் கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டில் மோடி தெரிவிப்பு

"நாடுகள் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். விரிவாக்கவாதத்தில் அல்ல."

– இவ்வாறு 19 ஆவது கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

லாவோஸ் தலைநகர் வியன்டியானில் நடைபெற்ற 19 ஆவது கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாகி புயலால் உயிரிழந்தோர்க்கு முதலில் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சவாலான நேரத்தில், ஆபரேஷன் சத்பவ் மூலம் மனிதாபிமான உதவிகளை நாங்கள் வழங்கியுள்ளோம்.

ஆசியானின் ஒற்றுமையையும் மையத்தன்மையையும் இந்தியா தொடர்ந்து ஆதரித்து வருகிறது. இந்தியாவின் இந்தோ – பசிஃபிக் கண்ணோட்டத்திற்கும் குவாட் ஒத்துழைப்புக்கும் ஆசியான் முக்கியமானது. இந்தியாவின் "இந்தோ–பசிபிக் பெருங்கடல் முன்முயற்சி", "இந்தோ–பசிபிக் மீதான ஆசியான் கண்ணோட்டம்" ஆகியவற்றுக்கிடையே முக்கியமான ஒற்றுமைகள் உள்ளன. சுதந்திரமான, வெளிப்படையான, அனைவரையும் உள்ளடக்கிய, வளமான மற்றும் விதிகள் அடிப்படையிலான இந்தோ – பசிபிக் என்பது ஒட்டுமொத்த

பிராந்தியத்தின் அமைதிக்கும் முன்னேற்றத்திற்கும் முக்கியமானது.

தென் சீனக் கடலில் அமைதி, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை ஆகியவை ஒட்டுமொத்த இந்தோ – பசிபிக் பிராந்தியத்தின் நலனுக்கானது.

கடல்சார் செயல்பாடுகள் கடல் சட்டம் குறித்த ஐநா விதிமுறைகளுக்கு இணங்க இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். சுதந்திரமான கடல்வழி போக்குவரத்தையும் வான்வெளியையும் உறுதி செய்வது அவசியம். இதற்கு வலுவான, பயனுள்ள நடத்தை விதிகள் உருவாக்கப்பட வேண்டும். மேலும், பிராந்திய நாடுகளின் வெளியுறவுக் கொள்கைகளில் கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடாது. நமது அணுகுமுறை வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும், விரிவாக்கவாதத்தில் அல்ல.

உலகின் பல்வேறு பகுதிகளில் நடந்து வரும் மோதல்களால், மிகவும் எதிர்மறையாக பாதிக்கப்பட்டுள்ள நாடுகள் உலகளாவிய தெற்கைச் சேர்ந்தவை. யூரேசியா, மத்திய கிழக்கு போன்ற பிராந்தியங்களில் அமைதியையும் ஸ்திரத்தன்மையையும் எவ்வளவு விரைவில் முடியுமோ

அவ்வளவு விரைவில் மீட்டெடுக்க வேண்டும் என்ற விருப்பம் அனைவருக்கும் உள்ளது.

நான் புத்தரின் பூமியிலிருந்து வருகிறேன். இது யுத்த யுகம் அல்ல என்று நான் திரும்பத் திரும்பக் கூறியுள்ளேன். பிரச்சினைகளுக்கு போர்க்களத்தில் தீர்வு காண முடியாது.

இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு, சர்வதேச சட்டங்கள் ஆகியவற்றை மதிப்பது அவசியம். மனிதாபிமான கண்ணோட்டத்துடன், பேச்சுவார்த்தை மற்றும் ராஜீய நடைமுறைக்கு நாம் வலுவான முக்கியத்துவம் அளிக்க வேண்டும்

விஸ்வபந்து என்ற முறையில் தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதில், இந்தத் திசையில் பங்களிக்க இந்தியா அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொள்ளும்.

உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பயங்கரவாதம் பெரும் சவாலாக உள்ளது. அதை எதிர்த்துப் போராட, மிதநேயத்தில் நம்பிக்கை கொண்ட சக்திகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். சைபர், கடல்வழி, விண்வெளி ஆகிய துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை நாம் வலுப்படுத்த வேண்டும்.

நாளந்தாவின் மறுமலர்ச்சி என்பது கிழக்கு ஆசிய உச்சிமாநாட்டில் நாங்கள் அளித்த உறுதிமொழியாகும். இந்த ஜூன் மாதம், நாளந்தா பல்கலைக்கழகத்தின் புதிய வளாகத்தை திறந்து வைத்து அந்த வாக்குறுதியை நிறைவேற்றினோம். நாளந்தாவில் நடைபெறவுள்ள உயர்கல்வித் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்குமாறு இங்கு கூடியுள்ள அனைத்து நாடுகளுக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன்.

கிழக்கு ஆசிய உச்சி மாநாடு இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கையின் முக்கிய தூணாகும். இன்றைய உச்சிமாநாட்டை சிறப்பாக ஏற்பாடு செய்ததற்காக பிரதமர் சோனெக்சே சிபந்தோனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த தலைமைப் பொறுப்பை ஏற்கும் மலேசியாவுக்கும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், வெற்றிகரமான தலைமைப் பொறுப்புக்கு இந்தியாவின் முழு ஆதரவையும் அவர்களுக்கு உறுதியளிக்கிறேன்."– என்றார்.







# மில்டன் சூறாவளியால் 16 பேர் உயிரிழந்தனர்

மில்டன் சூறாவளி காரணமாக புளோரிடாவில் பலியானோர் எண்ணிக்கை 16 ஆக உயர்ந்துள்ளது.

பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், சூறாவளியின் தாக்கம் காரணமாக சுமார் 3 மில்லியன் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் மின் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.













# மத்திய பெய்ரூட்டில் இஸ்ரேல் வான் தாக்குதல்; 22 பேர் பலி

மத்திய பெய்ரூட்டில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலில் 117 பேர் காயமடைந்துள்ளனர் என லெபனானின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வான்வழித் தாக்குதல்களால் பல கட்டடங்கள் சரிந்து வீழ்ந்துள்ளன.

இந்தநிலையில், வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்ட இடத்தில் கண்காணிப்பு பணியாளர்கள் தேடுதல்களில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், மீட்கப்பட்ட பலர் நோயாளர் காவு வண்டிகள் ஊடாக வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.







பக்கங்கள் 02

# கனடா முரசு


வெள்ளிக்கிழமை 11/10/2024

## சட்டவிரோதமாக இயங்கிய சூதாட்ட மையம் சுற்றிவளைப்பு

கனடாவில் சட்டவிரோத சூதாட்ட மையம் சுற்றி வளைக்கப் பட்டுள்ளது.

கனடாவில் ரிச்மண்ட் ஹில் பகுதியில் இவ்வாறு சூதாட்டம் மையம் ஒன்று இயங்கி வந் துள்ளது.

02▶




# யுவதியொருவர் துஷ்பிரயோகம்; ஐந்து சிறுவர்களுக்கு வலை வீச்சு

**கனடாவில் யுவதியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக 5 சிறுவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**

**இந்த சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரும் பதின்ம வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

**மேற்படி ஐந்து சிறுவர்களையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.**

நோர்வூட் அவென்யூ மற்றும் ஜேன் ஸ்ட்ரீட் பகுதிக்கு அருகாமையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யுவதியை வேறு ஓர் இடத்திற்கு அழைத்து சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர் என தெரிவிக்கப் படுகின்றது. சந்தேக நபர்கள் அனைவரும் 15 முதல் 18 வயதுக்குட் பட்டவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த சம்பவம் தொடர்பில் தகவல்கள் இருந்தால் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

# உதைபந்தாட்ட பயிற்றுநருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை

கனடாவின் வின்னிபெக் உயர்நிலைப் பள்ளியின் முன்னாள் உதை பந்தாட்ட பயிற்றுவிப்பாளருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக் உயர்நிலைப் பள்ளி ஒன்றில் கால்பந்தாட்ட அணி பயிற்சிப்பாளராக கடமை ஆற்றிய கெல்சி மெக்கே என்பவருக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

54 வயதான மெக்கே தாம் பாலியல் குற்றச்செயலில் ஈடுபட்டதாக நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டிருந்தார்.

இந்த குற்றச் செயலுக்கு தண்டனையாக 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மெக்கே பயிற்றுவிப்பாளராக இருந்த காலத்தில் சிறுவர்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார் என்பது விசாரணைகளின் மூலம் நிரூபனமாகியுள்ளது.

இந்த வழக்கு விசாரணைகளின் அடிப்படையிலேயே தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பயிற்றுவிப்பாளர், ஆசிரியர் ஆகிய பதவி நிலைகளை



துஷ்பிரயோகம் செய்து பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபட்டார் என மெக்கே மீது குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது.




# வீட்டு வாடகை வீழ்ச்சி அடைந்தது

கனடாவில் வாடகைத் தொகை வீழ்ச்சி அடைந்துள்ளது.

கனடாவின் அனைத்து பகுதிகளிலும் சராசரி வாடகைத் தொகையானது குறைவடைந்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தின் பின்னர் தற்பொழுது வாடகைத் தொகை அதிகரிப்பு வீதம் குறைவடைந்துள்ளது.

கனடாவிற்குள் சர்வதேச மாணவர்களை அனுமதிப்பதில் அறிவிக்கப்பட்ட கட்டுப்பாடுகளே இதற்கான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

ரென்டல்ஸ்.சீ.ஏ. இணைய தளத்தினால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நாட்டின் சராசரி மாத வாடகைத் தொகை 2193 டொலர்கள் என பதிவாகியுள்ளது.

இந்த வீழ்ச்சிக்கான பிரதான ஏதுவாக வெளிநாட்டு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதில் அமுல்படுத்தப்படும் கெடுபிடிகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

# தந்தையை கொலை செய்த மகன் கனடாவில் அதிர்ச்சித் சம்பவம்

கனடாவில் தந்தையை படுகொலை செய்ததாக அவரது மகன் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் கடந்த 05 ஆம் திகதி ரொறன்ரோவின் லோரன்ஸ் அவென்யூ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வயோதிப தந்தையை அந்த நபர் படுகொலை செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. 82 வயதான ஹென்றி ஜோசப் என்பவர் வீட்டில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.



இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அண்ட்று ஜோசப் என்ற 36 வயதான நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முதியவர் எவ்வாறு படுகொலை செய்யப்பட்டிருந்தார் என்பது பற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. இந்த கொலை சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சட்டவிரோதமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவிரோதமான முறையில் வீடு ஒன்றில் இந்த சூதாட்ட மையம் இயங்கி வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என 18 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து இரண்டு ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சூதாட்டம் மையத்திலிருந்து பெருந்தொகை பணமும் வாகனங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவத்துடன் தொடர்புடைய 18 பேருக்கு எதிராக 22 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டிலும் சட்டவிரோத சூதாட்ட மையங்களில் நடத்திச் சென்ற பலர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.இவ்வாறான நபர்களிடமிருந்து பெருந்தொகை பணம் மீட்கப்பட்டிருந்தது.

